**செய்தி வெளியீடு எண்:121** **நாள்:20.05.2021**

**செய்தி வெளியீடு**

கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்தின் பொருளாதாரம் மீண்டெழுவதற்கும், இந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கும் தமிழ்நாடு அரசு கூடுதலான நிதி ஆதாரங்களைச் செலவிட வேண்டிய தேவை உள்ளது. எனவே, அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களால் இயன்ற வகையில் உதவிட முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நன்கொடை வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோளுக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இன்று (20.5.2021) கோயம்புத்தூர் மாவட்டத்தில், கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, சைமா அமைப்பின் சார்பில் திரு. ராஜ்குமார் மற்றும் நிர்வாகிகள் 2 கோடியே 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, சக்தி குழுமத்தின் சார்பில் திரு. மாணிக்கம் மற்றும் நிர்வாகிகள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, பிரிக்கால் குழுமத்தின் சார்பில் திருமதி வனிதா மோகன் அவர்கள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, கோ. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனை சார்பில் டாக்டர் ரகுபதி வேலுசாமி மற்றும் நிர்வாகிகள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, பி.எஸ்.ஜி. குழுமத்தின் சார்பில் திரு. ரங்கசாமி மற்றும் நிர்வாகிகள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, ரூட்ஸ் குழுமத்தின் சார்பில் திரு. ராமசாமி மற்றும் நிர்வாகிகள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, சி.ஆர்.ஐ. பம்பு நிறுவனத்தின் சார்பில் 3 கோடி ரூபாய்க்கான காசோலை, இராமகிருஷ்ணா மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்கள், எஸ்.என்.ஆர். சன்ஸ்

அறக்கட்டளை சார்பில் திரு. லட்சுமி நாராயணசாமி மற்றும் நிர்வாகிகள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை;

கே.என்.ஆர். கட்டுமான நிறுவனத்தின் சார்பில் 2 கோடி ரூபாய்க்கான காசோலை, சாந்தி பீட்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, ஜி.வி.ஜி. பேப்பர் குழுமத்தின் சார்பில் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, கோவை மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் சார்பில் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் சார்பில் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, ஸ்மார்ட் சிட்டி ஒப்பந்ததாரர்கள் சார்பில் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, தமிழ்நாடு ரைஸ்மில் உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, ஜெம் மருத்துவமனை சார்பில் டாக்டர் பழனிவேல் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, ராயல் கேர் மருத்துவமனை சார்பில் டாக்டர் மாதேஸ்வரம் அவர்கள் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கங்கா மருத்துவமனை சார்பில் டாக்டர் ராஜசேகரன் அவர்கள் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கொங்குநாடு மருத்துவமனை சார்பில் டாக்டர் கார்த்திகேயன் ராஜு அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, குமரன் மருத்துவமனை சார்பில் டாக்டர் ஹரிபிரசாத் மற்றும் டாக்டர் கோகுல் ஆகியோர் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை;

பி.பி.ஜி மருத்துவமனை சார்பில் டாக்டர் தங்கவேல் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, என்.ஜி. மருத்துவமனை சார்பில் டாக்டர் மனோகரன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கற்பகம் மருத்துவக் கல்லூரி நிறுவனத்தின் சார்பில் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, அபிராமி மருத்துவமனை சார்பில் டாக்டர் செந்தில் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, குன்னூர் டீ எஸ்டேட் சார்பில் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, மருதமலை சேனாதிபதி சார்பில் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஊரக வளர்ச்சித் துறை

ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் சார்பில் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, இந்துஸ்தான் கல்லூரி சார்பில் திரு. கண்ணையன் மற்றும் திருமதி சரஸ்வதி ஆகியோர் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, அகில இந்திய ஜவுளி தொழில் கூட்டமைப்பு சார்பில் திரு. ராஜ்குமார் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, மேற்கு மாநகராட்சி சார்பில் திரு. தனபால் அவர்கள் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, சுகுணா இண்டஸ்டீரிஸ் சார்பில் திரு. அனீஸ்குமார் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கிராப்ட்ஸ்மேன் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, CREDAI சார்பில் திரு. அரவிந்த் மற்றும் நிர்வாகிகள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, டெக்கான் கார்வேல் பம்ஸ் சார்பில் திரு.கே.வி. கார்த்திக் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, எல்.ஜி.பி. குழுமத்தின் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, சுமங்கலி ஜீவல்லர்ஸ் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, அனிதா டெக்ஸ்காட் சார்பில் திரு. சந்திரசேகர் அவர்கள் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை;

கனிம வள மைனிங் உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கிஸ்கால் சார்பில் திரு. கண்ணப்பன் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் சார்பில் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை, அம்பிகா காட்டன் மில்ஸ் சார்பில் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, காட்மா சங்கத்தின் சார்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஆர்த்தி அசோசியேட்ஸ் சார்பில் திரு. முத்துராமன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கந்தசாமி ஆர்ட்ஸ் சென்டர் சார்பில் திரு. ஆர்.பி.கே. ராஜமன்னார் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, தானுகோடி ஆதித்யா ஆட்டோ ஸ்டோர்ஸ் சார்பில் திரு. மாசிலாமணி அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, லட்சுமி செராமிக்ஸ் சார்பில் 15 லட்சம் ரூபாய்க்கான காசோலை, வினோத்– சோனலி டெக்ஸ்டைல்ஸ் சார்பில் 15 லட்சம்

ரூபாய்க்கான காசோலை, ஏபிஞ்சர் டுலிங் ஏஷியா லிமிடெட் சார்பில் 15 லட்சம் ரூபாய்க்கான காசோலை, அன்னப்பூரணா குழுமத்தின் சார்பில் திரு. சீனிவாசன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை;

ராஜஸ்தானி சங்கத்தின் சார்பில் 11 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பில் திரு. கிருஷ்ணன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, வாழ்கரோ பவுன்டேஷன் சார்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, முருகானந்தம் ஆர்த்தி பில்டர்ஸ் சங்கத்தின் சார்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, திறந்தவெளி ரைஸ்மில் சங்கத்தின் சார்பில் திரு. அருள்மொழி மற்றும் திரு. ராம்பிரசாத் ஆகியோர் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, பையா கவுண்டர் (எ) கிருஷ்ணன் அவர்கள் 75 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, கே.ஜி. டெனிம் சார்பில் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலை, சிம்ஸ் மருத்துவமனை சார்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை, அக்குவா சப் இன்ஜினியரிங் சார்பில் திரு. நரேந்தர் அவர்கள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை, ஒசாமா நிறுவனத்தின் சார்பில் 16 லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஆர்.எஸ்.கே. கட்டுமான நிறுவனத்தின் சார்பில் 20 லட்சம் ரூபாய்க்கான காசோலை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய சங்கத்தின் சார்பில் 16 லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஓஷிமா நிறுவனத்தின் சார்பில் 12 லட்சம் ரூபாய்க்கான காசோலை, நீலகிரி மாவட்டத்தின் சார்பில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் 29 லட்சம் ரூபாய்க்கான காசோலை, சிலம்பு சாம்பியன் சிறுமி பிரகதி 25,000 ரூபாய், சிறுவன் துவரகேஷ் 1,250 ரூபாய், என மொத்தம் சுமார் 32 கோடி ரூபாய் நிதி வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். நாகராஜன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**